**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV இல் 2015.12.31 ஆந் திகதி வரை பதிவு செய்யப்பட்டுள்ள மிருக வைத்தியர்களின் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகிறது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1962 - 2016 අප්‍රේල් මස 08 වැනි සිකුරාදා - 2016.04.08

*1962 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 870 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 873 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, சனவரி 1 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*.

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## பஸ்கொட பிரதேச சபை

தென் மாகாண அரச சேவைக்குரிய பஸ்கொட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு தகுதி வாய்ந்த தகைமைகள் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | வெற்றிடத் தொகை | சம்பள அளவும் குறியீடும் | கல்வி மற்றும் வேறு தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 1 | சாரதி III | 1 | 06/2006 (VI) PL -3<br>ரூபா 12,470-10×130-145×10-160×10-170×12-ரூ. 18,860. | **வெளி விண்ணப்பதாரிகளுக்கு**<br>(i) கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஏதாவது ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இரண்டாம் மொழி தவிர.<br>(ii) மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி உரிதிப் பத்திரம் திறமை தொடர்பாக வழங்கப்பட்ட கடும் வாகன உறுதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(iii) 3 வருட சாரதி பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | இயந்திர செயற்பாட்டாளர் | 1 | 06/2006 (VI) PL -3<br>ரூபா 12,470-130×10-145×10-160×10-170×12-ரூபா 18,860 | (i) கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஏதாவது ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இரண்டாம் மொழி தவிர.<br>(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பக் கல்வி கொமிசன் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய தொழிற்துறைத் திறமைகளாகிய (NVQ) குறைந்தமட்ட செயற்திறனான நாலாம் நிலை செயற்திறனை பெற்றிருத்தல் வேண்டும்.<br>(iii) வாகன சாரதியாக மூன்று வருட கால பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>(iv) தார் நிறை 34 அந்தருக்கு கூடிய மோட்டார் வாகனம் மற்றும் டேலர் அடுத்து பயணிகள் 32 க்கு கூடுதலாக எடுத்துச் செல்லக்கூடிய பஸ் வண்டி செலுத்தக்கூடிய மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட திறமைச் சான்றிதழ். |

2. **ஆட்சேர்ப்புமுறை தொடர்பான நிபந்தனைகள்:**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) விண்ணப்பதாரி 3 வருட காலம் தென் மாகாண சபை வலுப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்;

(3) விண்ணப்பப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதும், 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.);

(4) விண்ணப்பதாரர் சரீர சுகத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

(5) தகைமைகளைப் பரீட்சித்து சட்டபூர்வமான நேர்முகப் பரீட்சையொன்றின் பின்பே ஆட்சேர்ப்பு நடைபெறும்;

(6) விண்ணப்பதாரி நீதி குற்றவியல் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;

(7) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு, தாமதமாக்குதல், அல்லது இடமாற்றம் அல்லது அறிவித்தலை இரத்துச் செய்தல் அனைத்து தகுதிகளும் பஸ்கொட பிரதேச சபையின் செயலாளரைச் சாரும்;

(8) பஸ்கொட பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தின் நிரந்தரமாக வதிவாளருக்குமாக முக்கியமானவனாக தற்போது சேவை புரியும் ஊழியர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**3. சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்.-**

(1) மேற்குறித்த (தொடர் இலக்கம் 1 தொடக்கம் 2 வரை) பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். சேவைக்கு அமர்த்தப்பட்டவர் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவம் பணம் வழங்குதல் வேண்டும்;

(2) இப்பதவி 3 வருட பயிற்சிக் காலத்திற்கு உட்பட்டதாகும்;

(3) இந்த ஆட்சேர்ப்பின் பின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிருவாகக் கோவையின் கட்டளைகளுக்கும் மற்றும் நிதிக் கட்டளைகளுக்கும், திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், அரச மற்றும் தென் மாகாண சபையினால் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் அனுசரித்து செயற்பட இணைந்திருத்தல் வேண்டும்.

**4. விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறை.-**

(1) இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை A4 அளவிலான தாள்களில் இரு பக்கத்தினையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டியதோடு, விண்ணப்பப்படிவத்தை 2016.04.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக செயலாளர், பஸ்கொட பிரதேச சபை, ஊருபொக்க என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமாகி அல்லது நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவ துண்டு.

(2) ஏதேனும் நிறுவனத்தில் தொழில் புரிபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

* பிறப்புச் சான்றிதழ்;
* கல்விச் சான்றதழ்;
* வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதியுடன்);
* சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு. (அதில் ஒன்று கிராம அலுவலரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.)

எல். இந்திரா பேமலத்தா,
செயலாளர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2016, மாச்சு 15.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தென் மாகாண அரசாங்க சேவையில் பஸ்கொட பிரதேச சபை ..................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. (i) விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.
(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடும் பெயர் :----.
2. தபால் விலாசம் :----.
3. (i) பிறந்த திகதி :-
வருடம் :-----, மாதம் :----, திகதி :----.
(ii) ------------- திகதிக்கு வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் :----.

6. திருமணமானவரா?/திருமணமாகாதவரா? :----.
7. தேசிய இனம் :----.
8. நிரந்தர வதிவுடைய பிரதேச செயலகம் :----.
9. தென் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வதியும் காலம் :----.
10. இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பிரசா உரிமை மூலமா? பதிவின் மூலமா? :----.
11. கல்வித் தகைமைகள் (தேர்ச்சி பெற்ற பரீட்சை தொடர்பான விபரம்) :-
   (i) தேர்ச்சி பெற்ற வருடம்/தரம் :-----. வருடம் :-----.
   (ii) க. பொ. த. (சா/த.) பரீட்சை

   பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

   (iii) க. பொ. த. (உ/த.) பரீட்சை
   பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

12. தொழில் தகைமை மற்றும் தேர்ச்சி :----.
13. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டிருப்பின், சேவைக் கால விபரம் :----.
14. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீர்களா? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இவை பிழையானது எனத் தெரியவந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் இரத்துச்செய்யப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் எனவும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பதாரரினால் தரப்பட்ட விபரங்கள் உண்மையென்றும், பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கின்றேன். தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் .................................. சேவை புரிகின்றார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

-------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(இறப்பர் முத்தரையிடப்படல் வேண்டும்.)

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

4-436

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## புத்தளம் நகர சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி)*

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி சபைகள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் சொல்லப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச்சட்டத்தின், 118 மற்றும் 157 ஆம் பிரிவுகளின் உப பிரிவு 9 (அ) மற்றும் (இ) இன் கீழ் எனக்குறித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் நகர சபையின் செயலாளரான வத்தேகெதர நிஷாந்த குமார ஆகிய நான்,

**நகர சபை திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான துணை விதிகள்**

புத்தளம் நகர சபை அதிகார எல்லைக்குள் செயற்படுத்தப்பட வேண்டுமென, 2016.03.10 ஆந் திகதி தீர்மான இலக்கம் 218 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன்.

டபிள்யூ. ஜீ. நிஷாந்த குமார,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
புத்தளம் நகர சபை.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்ற விடயப்பொறுப்புடைய அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் அமைக்கப்பட்ட 2015.09.25 ஆந் திகதி 1933/40 ஆம் இலக்க இலங்கைச் சனநயாக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் IV (அ) இல் பிரசுரிக்கப்பட்டதுமான,

* நகர சபை திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதிகள்.

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி சபைகள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கமைய புத்தளம் நகர சபை அதிகார எல்லைக்குள் செயற்படுத்தப்பட வேண்டுமென்று,

நகர சபை சட்டத்தின் 153 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 118 மற்றும் 157 ஆம் பிரிவுகளின் உப பிரிவு 9 (அ) மற்றும் (இ) இன் கீழ் எனக்குறித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் இத்தால் தீர்மானிக்கின்றேன்.

4-433

## கொபெய்கனே பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட துணை உறுப்புரைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் முதல் அமைச்சரும் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மற்றும் மாகாண பரிபாலனம், மனித வளங்கள், காணி, சூழல், சுற்றுலாத் துறை, முதலீட்டு தொடர்பாடுகள், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சருமாகிய, சட்டத்தரணி ஜே. சி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர அவர்களினால் தயாரிக்கப்பட்ட பிரதேச சபைகளின் திண்மக் கழிவு பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணை சட்டம் அடங்கிய 2015.09.25 ஆந் திகதி உடைய 1933/40 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை கொபெய்கனே பிரதேச சபையினால் ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளல்.

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட துணை உறுப்புரைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் முதல் அமைச்சரும் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மற்றும் மாகாண பரிபாலனம், மனித வளங்கள், காணி, சூழல், சுற்றுலாத் துறை, முதலீட்டு தொடர்பாடுகள், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சருமாகிய, சட்டத்தரணி ஜே. சி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர அவர்களினால் 1987 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 4 ஆந் திகதி இடப்பட்டு அறிவித்தல் செய்து உள்ள 1952 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய குறிப்பிட்ட சட்டத்தின் 93 ஆம் பிரிவு மற்றும் 126 ஆம் பிரிவில் IX ஆம் உப பிரிவில் (ஆ) மற்றும் (இ) பந்திகளினால் திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைச் சட்டம் 2016.01.20 ஆந் திகதி முதல் ஏற்றுக்கொள்வது பொருத்தம் என்று 2016.01.20 ஆந் திகதி கூடிய கொபெய்கனே பிரதேச சபையின் பரிபாலனக் கமிட்டி அங்கீகார இலக்கம் 6 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கியுள்ள அங்கீகரித்ததையும் 2016.02.02 ஆந் திகதியுடைய 194 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டு உள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர். ஏ. என். பி. ராஜபக்ஷ,
செயலாளர்,
கொபெய்கனே பிரதேச சபை.

பிரதேச சபை,
கொபெய்கனே,
2016, மாச்சு 23.

**பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதி**

1. இந்த துணை விதி திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணை விதி என்று அழைக்கப்படும்.

2. கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பிரசித்த இடங்களில், வீதிகளில், பாதைகளில் ஒன்று சேரும் திண்மக் கழிவுப் பொருட்களை வேறுபடுத்துதல், ஒன்று சேர்த்தல், அவைகளைக்

கொண்டு செல்லுதல், களஞ்சியப்படுத்துதல், மாற்றும் இடங்களை நடைமுறைப்படுத்துதல், மற்றும் நடாத்திச் செல்லுதல், தயாரித்தல், சீராக்கல், அகற்றுதல் சம்பந்தமான வழி நடத்துதல், மேற்பார்வை செய்தல் பரிசீலித்தல் மற்றும் பரிபாலித்தல் போன்ற விடயங்களுக்கு இந்த துணை விதி வழி வகை செய்கின்றது.

3. கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது வளவுக்குள் வசிப்பவர்கள் அந்த வளவை கழிவுப்பொருட்கள் இன்றி சுகாதாரத்துக்கு ஏற்ற வகையில் மற்றும் மனதிற்கினிய நிலைமையில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

4. கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது வளவுக்குள் வசிப்பவர்கள் அந்த வளவுக்குள் ஒன்று சேரும் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்த்தல், வெவ்வேறாகப் பிரித்தல், களஞ்சியப்படுத்தல், மற்றும் அகற்றுதல் செய்தல் வேண்டும். அல்லது இந்த துணை விதியின் பிரகாரம் செய்தல் வேண்டும்.

5. (i) வளவின் உரிமையாளர் அல்லது வளவுக்குள் வசிப்பவர்கள் தங்கள் வளவுக்குள் ஒன்றுசேரும் திண்மக் கழிவுப் பொருட்களை, கழிவுப் பொருட்களை கூட்டுவதன் மூலமோ அல்லது வேறு முறைகளைப் பயன்படுத்தி, அல்லது தினமும் அல்லது அதற்கு குறைவான கால எல்லைக்குள் ஒன்று சேர்த்தல் வேண்டும்.

(ii) அனைத்து வளவின் உரிமையாளர் அல்லது வளவுக்குள் வசிப்பவர்கள் இந்தத் துணை விதிக்கு முன்பாக உள்ள துணை பிரிவுக்கு அமைய ஒன்று சேர்த்த 8 முதல் 20 வரை உள்ள பிரிவுக்களில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வேறுபடுத்துதல் வேண்டும். அல்லது அப்படிச் செய்வதற்கு வழி வகை செய்தல் வேண்டும்.

(iii) உரிமையாளர் அல்லது வசிப்பவர்கள் கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் அல்லது வெளி யேற்றுவதற்குப் பாவிக்கின்ற ஏதும் சாக்குகள் பைகள், விசாலமான பாத்திரம் அல்லது வேறும் கொள்கலன்கள் இந்த துணை உறுப்புரையின் விடயங்களுக்காக பயன்படுத்தும் போது அவைகளை நல்ல நிலைமையில் பாவித்தல் வேண்டும்.

(iv) கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 5 (1) ஆம் உப பிரிவுக்கு உட்பட்டவாறு ஒன்று சேர்க்கும் குப்பைகளை பொறுப்பேற்பதற்காக கொபெய்கனே பிரதேச சபையினால் முன் அறிவித்தல் கிடைத்ததன் பின்னர் உரிய சேவைகளை நடாத்திச் செல்ல வேண்டியதுடன் (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு ஒன்று சேர்த்த குப்பைகளை கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானித்து வெளியிடப்படுகின்ற கொபெய்கனே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் குப்பைகளை ஒன்று சேர்க்கும் அட்டவணை அடிப்படை யில் உரிமையாளரினால் அல்லது வசிப்பவரினால் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(v) உரிமையாளர் அல்லது வசிப்பவர் வீட்டார்கள் அதிதி களின் அல்லது அயலவர்களின் சுகாதாரத்துக்கு அல்லது அப்பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு பங்கம் ஏற்படுத்தும் அல்லது அபாயகரமான வகையில் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்த்தல், களஞ்சியப் படுத்தல் அல்லது அப்புறப்படுத்தல் செய்யக்கூடாது.

6. (i) எந்த ஒரு நபரும் வீதிக்கு, பாதைக்கு, பெருந் தெருவுக்கு, ஒழுங்கைக்கு, அடிப்பாதைக்கு, அல்லது வேறு பொது ஸ்தானத்துக்கு, அல்லது வளவுக்கு, அல்லது காணுக்கு, அல்லது நீரோடைக்கு, பாதுகாப்புப் பிரதேசத்துக்கு அல்லது நீர்த் தேக்கத்துக்கு, கலப்புக்கு, நீர் ஊற்றுக்கு அல்லது, கடலுக்கு கழிவுப் பொருட்களை போடக் கூடாது;

(ii) எவராவது ஒரு நபர் கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் திறந்த காணிக்குள் சூழலுக்கு பங்கம் ஏற்படும் வகையில் கழிவுப்பொருட்களை பற்ற வைத்தல் கூடாது;

(iii) எவராவது ஒரு உரிமையாளர் அல்லது வசிப்பவர் 7 ஆம் இலக்க பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதும் ஒரு கழிவுப் பொருள் வகையினை வெளியேற்றுவதற்கு சீராக்குவதற்கு, தயாரிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அனுமதி பெறுவதற்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அப்படி அனுமதி பெறுவதற்கு முடியாமற் போனால் அவருக்கு அந்தக் கழிவுப் பொருட்களை அங்கீகாரம் பெற்ற கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு ஒப்படைக்க முடியும்.

(iv) 7 ஆம் இலக்க பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தயார் செய்தல், சீராக்கல் செய்தல் அல்லது அகற்றுதல் அல்லது செய்யப்படாத கழிவுப்பொருட்களை மேலே குறிப் பிட்டுள்ள 6 (iii) இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஏதும் ஒரு அங்கீகாரம் பெற்ற கழிவுப் பொருள்களை ஒன்று சேர்ப்பவர் ஒருவரினால் ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப் பொருள் வகையினை இந்தச் துணை விதியின் ஏற்பாடுகளின் அடிப்படையில் அகற்றப்படல் வேண்டும்.

7. (i) ஏதும் ஒரு வளவினது உரிமையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்கள் சம்பந்தமாக அல்லாத கழிவுப் பொருட்களை வளவுகள் அகற்ற முடியும்:-

(அ) கொபெய்கனே பிரதேச சபையினால் அப்படியான கழிவுப் பொருட்களை அகற்றுதல் தடை செய்யப் பட்ட பிரதேசமாக இருத்தல்;

(ஆ) கொபெய்கனே பிரதேச சபையினால் அப்படியாக நிச்சயித்து குறிப்பிட்டு உள்ள ஏதும் கழிவுப் பொருள் வகைகள்.

(ii) வளவின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கும் மற்றும் நியமத்துக்கும் அனுகூலமான முறையில் நிர்மானிக்கப்பட்ட எரிகுழி அல்லது போரணையில் கழிவுப் பொருட்களை எரிக்க முடியும் அல்லது செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் சீராக்கல், தயாரித்தல் அல்லது புதைக்க முடியும்;

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது வசிப்பவர் ''கொம்போஸ் குவலை'' க்கு செயலாளரிடத்தில் வேண்டுதல் விடுக்கப்படுமிடத்து அந்த உரிமையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு கொம்போஸ் குவலையினை பராமரிப்பதற்கு தேவையான இடவசதி வளவுக்குள்

இருக்குமாயின் செயலாளர் அந்த ‘கொம்போஸ் குவலையினை’ பெறுமதியின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக நன்கொடையாக பெற்றுக்கொடுத்து அந்த கொம்போஸ் குவலையை உரிமையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு வழங்கமுடியும்;

(iv) உரிமையாளர் அல்லது வசிப்பவர் வளவுக்குள் ஒன்று சேரும் ‘‘வீட்டுத் தோட்ட கழிவுப் பொருட்களை’’ முடியுமான அளவு குறிப்பிட்ட வளவுக்குள் இந்த துணை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பின்னர் மீதியாகும் ஏதும் வீட்டுத்தோட்ட கழிவுப்பொருட்கள் இருப்பின் கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கின்ற பிரகாரம் குறிப்பிட்ட கட்டணம் ஒன்றைச் செலுத்துவதன் மூலம் கொபெய்கனே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்;

(v) வீதி ஒன்றில் அல்லது பாதைக்கு அருகாமையில் இருக்கும் ஏதும் ஒரு மரத்தை அல்லது அந்த மரத்தின் ஒரு பகுதியை வெட்டும் ஏதும் ஒரு நபர் உடனடியாக அதனை அகற்றுதல் வேண்டும் அல்லது அகற்றுவதற்கு ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். அப்படியும் இன்றேல் கொபெய்கனே பிரதேச சபையினால் தீர்மானிக்கும் ஒரு கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கொபெய்கனே பிரதேச சபையின் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்;

(vi) எந்த ஒரு நபரும் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஏதும் ஒரு மிருகம் வீதி ஒன்றில் அல்லது பாதையில் அல்லது பொது இடம் ஒன்றில் மலம் கழிப்பதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அப்படி மலம் கழிக்குமிடத்து துணைச் சட்டத்தின் பிரகாரம் அதைத் துப்பரவு செய்து அகற்றுவது அந்த நபரின் கடமையாகும்;

(vii) எந்த ஒரு நபரும் கொபெய்கனே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் எந்த ஒரு வகையினதுமான அல்லது கழிவுப்பொருட்களை வாகனத்திலிருந்து வீதி ஒன்றுக்கு பாதை ஒன்றுக்கு, அல்லது பொது இடத்திற்கு, ஓடை ஒன்றிற்கு, கால்வாய் ஒன்றிற்கு, நீர் ஊற்று ஒன்றிற்கு, பாதுகாக்கப்பட்ட இடத்துக்கு, கலப்புக்கு, வெளியேற்றுவது அல்லது அங்கு புதைப்பது கூடாது;

(viii) வீடு ஒன்று அல்லது வேறு ஏதும் ஒன்றை வளவுக்குள் நிர்மாணிப்பதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு திட்டம் ஒன்றை அங்கீகரித்துக்கொள்வதற்கு விண்ணப்பிக்கின்ற எவரும் ஒரு நபர் அவரின் வளவுக்குள் உருவாகும் திண்மக் கழிவுப்பொருட்களை மற்றும் வெளியேற்றப்படுகின்ற திரவங்களை சுத்திகரிக்கின்ற மற்றும் தயாரிக்கின்ற முறை பற்றிய திட்டத்தை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**வீட்டு வளவுகள்**

8. (i) அனைத்து உரிமையாளர்களும் அல்லது வசிப்பவர்களும் கூட்டுவதன் மூலம், அல்லது வேறு முறையில் ஒன்று சேர்க்கும் கழிவுப்பொருட்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வெவ்வேறாக தெரிவு செய்து வேறுபடுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுப்பொருட்களின் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப் பொருட்கள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(ஈ) இறந்த மிருகங்களின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம்;

(உ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்றுசேறும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) அனைத்து உரிமையாளர்களும் அல்லது வசிப்பவர்களும் அப்படியாக வெவ்வேறாக தெரிவுசெய்து வேறுபடுத்திய கழிவுப்பொருட்களை வெவ்வேறாக உரைகளில் அல்லது பாத்திரங்களில் அல்லது வேறு கொள்கலன்களில் போட வேண்டியதுடன், அவைகளை அப்புறப்படுத்தப்படும் வரை அவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்தல் வேண்டும். உணவுப் பொருட்களின் கழிவுப் பொருட்கள் மற்றும் தாவர கழிவுப் பொருட்களை அவைகளின் ஈரழிப்புத் தன்மை வெளியாகாமல் இருக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட மற்றும் எலிகள் கிருமிகள் மற்றும் ஏனைய மிருகங்கள் நுழையாமல் தடுக்கக்கூடிய மூடப்பட்ட கொள்கலன்களில் வைத்தல் வேண்டும். இறந்த மிருகங்களின் சடலங்கள், உடல் உருப்புக்கள் அல்லது மலம் சம்பந்தப்பட்ட கழிவுப் பொருட்களை அகற்றப்பட வேண்டிய கழிவுப் பொருட்களின் தன்மையை கருத்திற்கொண்டு கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காலத்துக்குக் காலம் கொபெய்கனே பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற பிரகாரம் கட்டணத்தை அறவிட்டதன் பின்னர் மாத்திரம் கொபெய்கனே பிரதேச சபையினால் குறிப்பிட்ட கழிவுப்பொருட்களை பாரம் எடுத்தல் நடைபெறல் வேண்டும்;

(iii) அனைத்து உரிமையாளர்களுக்கும் அல்லது வசிப்பவர் களுக்கும் 8 (i) உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்தியில் உள்ள விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை அங்கீகாரம் பெற்ற கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அப்படி இன்றேல் கொபெய்கனே பிரதேச சபையினால் அந்தக் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்க்கும் கொள்கலன் ஒன்றில் போட முடியும்.

9. (i) பல வாடகை குடியிருப்பாளர்களைக் கொண்ட மடிக் கட்டிடம் ஒன்றில் வசிக்கும் அனைத்து குடியிருப்பாளர் களும் அவர்களின் கழிவுப் பொருட்களை கீழே குறிப்பிட்டுள்ள பிரகாரம் தெரிவு செய்து வேறுபடுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுப்பொருட்களின் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(ஈ) இறந்த மிருகங்களின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;

(உ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்று சேரும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) 9 (i) ஆம் பிரிவில் நிச்சயித்து குறிப்பிட்டுள்ள பிரகாரம் கட்டிடம் ஒன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பவர் மேலே (அ), (ஆ) மற்றும் (இ) என்ற பகுதிகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களுக்காக இந்த துணை சட்டத்தின் தரத்துக்கும், நியமக் குறிப்புக்கும் ஏற்றவாறு கொள்கலன்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டியதுடன், அவைகள் சுத்தமாகவும், சுகாதாரத் துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்படல் வேண்டும்.

(iii) 9 (i) ஆம் பிரிவில் நிச்சயித்து குறிப்பிட்டுள்ள பிரகாரம் கட்டிடம் ஒன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பவர் மேலே (ii) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு உடன்படுவதற்கு தவரும் சந்தர்ப்பத்தில் செயலாளரினால் அறிவிக்கப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை வழங்கும் படி உரிமையாளர் அல்லது வசிப்பவர்களுக்கு கட்டளை இடுவதற்கு செயலாளருக்கு அதிகாரம் உண்டு. செயலாளரின் கட்டளைப் பிரகாரம் செயற்படுவதற்கு உரிமையாளர் அல்லது வசிப்பவர் கடமைப்பட்டுள்ளார்.

(iv) கட்டிடத்தின் கீழ் அல்லது மாடியின் உரிமையாளரினால் அல்லது வசிப்பவர் தெரிவு செய்து வேறுபடுத்திய கழிவுப் பொருட்களை அதற்காக வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் போடுதல் வேண்டும்;

(v) இந்த துணைச் சட்டத்தின் 9 (i) ஆம் துணை பிரிவில் (அ) மற்றும் (ஆ) என்ற பகுதிகளின் கீழ் விபரிக்கப் பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவது அதிகாரம் பெற்ற ஒன்று ஒன்றுசேர்ப்பவரின் கடமையாகும். அப்படி அகற்றப்படாத ஏதும் கழிவுப்பொருட்களை கொபெய்கனே பிரதேச சபையினால் அதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்திற்கு அப்பொருட்களை கொண்டு சென்று போடுவது அல்லது அப்படி கொபெய்கனே பிரதேச சபைக்காக கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்;

(vi) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 9 (i) (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரமான கழிவுப்பொருட்களை மேலே (அ), (ஆ), (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளில் கீழ் எந்த வகையிலும் கலப்படம் செய்யக் கூடாததுடன், வீட்டு வளவின் உரிமையாளர், வாடகைக் குடியிருப்பாளர் அல்லது வசிப்பவர் அந்தக் கழிவுப்பொருட்களை அகற்றுவதாயின் அதற்காக விசேடமாக சேவையினை நடாத்திச் செல்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ள கழிவுப் பொருட்ளை ஒன்றுசேர்ப்பவர் மூலமாக மாத்திரமே அகற்றப்படல் வேண்டும்.

10. (i) கொபெய்கனேபிரதேச சபையின் முன் அனுமதி பெற்று சேரி வாசிகளின் பாவனைக்காக வேண்டி செயலாளரினால் கழிவுப் பொருள் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களை இனாமாக வழங்குவது சட்டபூர்வமான தாகும்;

(ii) அனைத்து சேரிப்புர வீடுகளின் உரிமையாளர்களும் அல்லது வசிப்பவரும் அவருடைய வசிப்பிடத்தில் ஒன்று சேர்க்கின்ற கழிவுப்பொருட்களை கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறு தெரிவு செய்து வேறுபடுத்தி அவருடைய வசிப்பிடத்துக்கு மிக அருகாமையில் வழங்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்:-

(அ) உணவுப்பொருட்களின் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iii) இந்த துணைச் சட்டத்தின் 10 (ii) உப பிரிவின் (அ), (ஆ) பந்திகளில் விஷேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அகற்றுவதற்காக கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவர் ஒருவருக்கு அனுமதி வழங்குவது செயலாளரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

**கடைகளும் அலுவலகங்களும்**

11. (i) கடை ஒன்றின் அல்லது அலுவலகத்தின் அனைத்து உரிமையாளர்களும் அல்லது முகாமையாளரும் ஒவ்வொரு கட்டிடத் தொகுதியிலும் ஒன்றுசேரும் கழிவுப் பொருட்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி தெரிவு செய்து வேறுபடுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுப்பொருட்களின் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(ஈ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்று சேரும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) தெரிவு செய்து வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அகற்றப்படும் வரையில் வெவ்வேறாக பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் போட்டு பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iii) கடை ஒன்றின் அல்லது அலுவலக உரிமையாளருக்கு அல்லது முகாமையாளருக்கு இந்த துணைச் சட்டத்தின் 11 (i) ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அங்கீகாரம் பெற்ற கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

(iv) பல மாடிகளைக் கொண்ட கடைகள் அல்லது அலுவலக கட்டிடத் தொகுதியின் உரிமையாளர் அல்லது முகாமையாளர் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தரக் கட்டுப் பாட்டுக்கு உட்பட்ட வகையில் அந்த கடையிலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து தெரிவு செய்து

வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அகற்றும் வரை வெவ்வேறாக பாத்திரங்களில் அல்லது கொள்கலன் களில் போட்டு பொருத்தமான இடம் ஒன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைச் சட்டத்தின் 11 (i) ஆம் உப பிரிவில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கடை ஒன்றின் அல்லது அலுவலகம் ஒன்றின் ஏதும் ஒரு உரிமையாளர் தெரிவு செய்து வேறாக்கிய கழிவுப் பொருட்களை வெவ்வேறாக பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும். இந்த துணைச் சட்டத்தின் 11 (i) ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அங்கீகாரம் பெற்ற கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைப்பதற்கு அனைத்து உரிமையாளர் களுக்கும் மற்றும் முகாமையாளருக்கும் உரிமை உண்டு.

(vi) அங்கீகாரம் பெற்ற கழிவுப்பொருட்கள் ஒன்று சேர்ப்பவரினால் ஒன்று சேர்க்கப்படாத இந்த துணைச் சட்டத்தின் 11(i) ஆம் உப பிரிவின் (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் பிரகாரம் கட்டணம் ஒன்றை அறவிட்டதன் பின்னர் கொபெய்கனே பிரதேச சபையின் கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்து சட்டபூர்வமானதாகும்.

(vii) மேலே (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள் மேலே (அ), (ஆ), (ஈ) ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் எந்த வகையிலும் கலக்கக் கூடாததுடன் கடையின் அல்லது அலுவலகத்தின் அனைத்து உரிமையாளர்களும் அல்லது முகாமையாளரும் அந்த கழிவுப் பொருட்களை அகற்றுவதானது அந்த கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு அதற்கான விஷேடமாக சேவைகளை நடாத்திச் செல்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் மாத்திரமே ஆகும்.

(viii) அயலவர்களுக்கு அல்லது குறிப்பிட்ட கடையின் அல்லது அலுவலகத்தின் சேவையில் உள்ள நபர்களுக்கு அல்லது ஏதும் சுகாதாரத்துக்கு அல்லது சுகாதார பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு கழிவுப் பொருட்கள் அகற்றுவதும், இந்த துணைச் சட்டத்தின் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் பராமரிப்பது எல்லா கடைகளினதும் அல்லது அலுவலகங்களினதும் அனைத்து உரிமையாளர்களினதும் அல்லது முகாமை யாளர்களினதும் கடமையாகும்.

### ஹோட்டல்கள்

12\. (i) அனைத்து ஹோட்டல் உரிமையாளர்களும் அல்லது உரிமையாளரினால் எழுத்து மூலம் அங்கீாரம் கொடுக் கப்பட்டுள்ள ஏதும் ஒரு நபர் தமது வளவுக்குள் ஒன்று சேரும் கழிவுப் பொருட்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி தெரிவு செய்து வேறுபடுத்துதல் வேண்டும். அல்லது அப்படிச் செய்வதற்கு ஆவன செய்தல் வேண்டும்:-

(அ) உணவுப் பொருட்களின் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(ஈ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்று சேரும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) அனைத்து ஹோட்டல் உரிமையாளர்களும் அல்லது உரிமையாளரினால் எழுத்து மூல அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு நபர் தெரிவு செய்து வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அகற்றப்படும் வரையில் வெவ்வேறாக பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் போட்டு பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iii) அனைத்து ஹோட்டல் உரிமையாளர்களும் அல்லது உரிமையாளரினால் எழுத்து மூல அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு நபர் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது வேறும் மிருகங்கள் உள் நுழைவதைத் தடுத்து அனைத்து உணவுக் கழிவுப்பொருட்களையும் மற்றும் மரக்கறி கழிவுப்பொருட்களையும் பிளாஸ்டிக் அல்லது உலோகப் பொருளால் செய்யப்பட்ட மற்றும் மூடி ஒன்றை பாவித்து உரிய முறையில் பாதுகாப்பான முறையில், பாத்திரம் ஒன்றில் அல்லது வேறு கொள்கலனில் மூடி வைக்கப்படல் வேண்டும்.

(iv) இந்த துணைச் சட்டத்தின் 12 (i) ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் விஷேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அங்கீகாரம் பெற்ற கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைச் சட்டத்தின் 12 (iv) ஆம் உப பிரிவின் கீழ் பொறுப்பேற்கப்படாத மேலே குறிப்பிட்ட (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் கொபெய்கனே பிரதேச சபையினால் அப்படியான கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட கொள்கலனில் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட ஏதும் ஒரு இடத்துக்கு அகற்றுவது சட்டபூர்வமானதாகும்.

(vi) மேலே (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்களை மேலே 9 (அ), (ஆ), (ஈ) பந்திகளின் கீழ் உள்ள கழிவுப் பொருட்களுடன் எந்த வகையிலும் கலந்து விடாமல் இருக்க வேண்டிய துடன், அனைத்து ஹோட்டல் உரிமையாளர்களும் அல்லது அவரது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட ஏதும் ஒரு நபர் அந்தக் கழிவுப் பொருட்களை அதற்கான விஷேட சேவையை நடாத்திச் செல்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட கழிவுப் பொருள் சேர்ப்பவர் மூலமாகவே அகற்றப்படல் வேண்டும்.

**மரக்கறி மற்றும் பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

13. (i) அனைத்து மரக்கறி மற்றும் பழவகைகள் விற்பனை நிலைய உரிமையாளர்களும் அல்லது அதற்குப் பொறுப்பாக உள்ள நபரும் தனது வர்த்தக நிலையத்தில் ஒன்று சேறும் கழிவுப் பொருட்களை கீழே குறிப்பிடப் பட்டுள்ள முறைப்படி தெரிவு செய்து வேறுபடுத்துதல் வேண்டும்.

(அ) மனிதப் பாவனைக்கு பொருத்தமற்ற மரக்கறி, பழவகைகள் அல்லது ஏனைய உக்கிப்போகும் கழிவுப்பொருட்கள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்.

(ii) இந்த துணைச் சட்டத்தின் 13 (i) அம் உப பிரிவின் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளின் ஈரழிப்புத் தன்மை கசியாது இருக்கும் வகையில் பிளாஸ்ரிக் அல்லது உலோக திரவியத்தினால் தயாரிக்கப்பட்ட வேறான கொள்கலனில் வைக்கப்படல் வேண்டியதுடன், அதற்குள் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது வேறும் மிருகங்கள் நுழையாதவாறு உரிய முறையில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்கள் பொருத்தமான ஏதும் பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் போடப்படல் வேண்டும்.

(iii) இந்த துணைச் சட்டத்தின் 13 (i) ஆம் உப பிரிவின் (அ), (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(iv) இந்த துணைச் சட்டத்தின் 13 (iii) ஆம் உப பிரிவின் கீழ் பொறுப்பேற்கப்படாத மேலே குறிப்பிட்ட விஷேடமாக தயாரிக்கப்பட்ட கொள்கலனில் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட ஏதும் ஒரு இடத்துக்கு அகற்றுவது சட்டபூர்வமானதாகும்.

**இறைச்சி, மீன் அல்லது முட்டை வர்த்தக நிலையங்கள்**

14. (i) குறிப்பிட்ட விடயங்களுக்காக தலைவரினால் அதற்கான ஏதும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் அங்கு குறிப்பிடப் பட்டுள்ள இடத்தில் எந்த ஒரு நபரும் மாடுகள் அறுக்கும் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதி அளிக்கப்பட்ட கால்நடைகளைத் தவிர வேறு எந்த கால்நடைகளையும் அறுத்தல் கூடாது.

(ii) இறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக இருக்கும் கடையின் தெரிவு செய்து வேறாக்கப்படல் வேண்டும்:-

(அ) மனிதப் பாவனைக்கு பொருத்தமற்ற இறந்த மிருகங்களின் சடலங்கள் அல்லது சடலங்களின் பகுதிகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(iii) தெரிவு செய்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்களை வெவ்வேறான பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் உள்ளே போடுதல் வேண்டும். இந்தத் துணைச் சட்டத்தின் 14 (ii) ஆம் உப பிரிவில் (அ) பந்தியில் விஷேடமாக குறிப்பிடப்பட்ட ஈரழிப்புத் தன்மை கசியாது இருக்கும் வேறான கொள்கலனில் வைக்கப்படல் வேண்டியதுடன், அதற்குள் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது வேறும் மிருகங்கள் நுழையாதவாறு உரிய முறையில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும்.

(iv) இந்தத் துணைச் சட்டத்தில் 14 (ii) ஆம் உப பிரிவின் (அ), (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். அப்படி ஒப்படைக்கப்படாத கழிவுப் பொருட்களை மேலே குறிப்பிட்ட (அ), (ஆ) பந்திகளின் பிரகாரம் விபரிக்கப்பட்டு உள்ள கழிவுப் பொருட்கள் கொபெய்கனே பிரதேச சபையினால் அதற்காக விஷேடமாக அதிகாரம் வழங்கப் பட்டுள்ள கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவர் மூலமாக ஒப்படைக்கப்படல் வேண்டும். பெயர் குறிப் பிடப்பட்ட ஏதும் ஒரு இடத்துக்கு அகற்றுதல் வேண்டும்.

**நடைப்பாதை வர்த்தகம் அல்லது நடமாடும் வர்த்தகம்**

15. (i) கழிவுப்பொருட்கள் உருவாகும் வர்த்தகத்தை நடாத்திச் செல்லும் நடமாடும் அல்லது நடைபாதை வர்த்தகர் ஒருவர் அதற்கு ஏற்றவாறு ஏதும் துணை சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள பிரகாரம் மற்றும் தரக்கட்டுப்பாட்டுக்கு ஏற்றவாறு கழிவுப் பொருட்களைப் போடுவதற்கான பாத்திரம் ஒன்றை அல்லது கொள்கலனை வைத்திருத்தல் வேண்டும். அப்படியான ஏதும் ஒரு கழிவுப்பொருள் நடைபாதையில், பெருந் தெருவில், நீரோடையில் அல்லது பொது ஸ்தானத்தில் போடக் கூடாது :-

(ii) அனைத்து நடைபாதை மற்றும் நடமாடும் வர்த்தகர்களும் வாகனங்களின் போக்குவரத்துக்கு பாதசாரிகளின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் பாத்திரம் ஒன்று அல்லது வேறும் கொள்கலன் ஒன்றை வைத்தல் கூடாது.

(iii) அனைத்து நடைபாதை மற்றும் நடமாடும் வர்த்தகர்களும் அவரின் வர்த்தகத்தினால் உருவாகின்ற கழிவுப் பொருட்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தெரிவு செய்து வேறாக்கல் வேண்டும்.

(அ) உணவுப்பொருட்களின் கழிவுப் பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;

(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iv) தெரிவு செய்து வேராக்கப்பட்ட கழிவுப்பொருட்களை வெவ்வேறான பாத்திரத்தில் அல்லது கொள்கலன் ஒன்றினுள் போடுதல் வேண்டும். இந்தத் துணைச் சட்டத்தின் 15 (iii) ஆம் உப பிரிவின் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை கிருமிகள் அல்லது வேறும் மிருகங்களினால் உண்ண முடியாத வாறு பாதுகாப்பான கொள்கலனின் உள்ளே போட்டு வைத்தல் வேண்டியதுடன், மேலதிக கழிவுப்பொருட் களை போடுவதற்கு தேவைப்படும் போது மாத்திரம் திறந்து வைத்திருத்தல் வேண்டியதுடன் ஏனைய வேளைகளில் மூடிவைத்திருத்தல் வேண்டும்.

(v) அனைத்து நடைபாதை மற்றும் நடமாடும் வர்த்தகர்களும் இந்தத் துணைச்சட்டத்தின் 15 (iii) உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அங்கீகாரம் பெற்ற கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(vi) மேலே (iii) (இ) பந்தியில் குறிப்பிட்டுள்ள உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்களுடன் எந்த விதத்திலும் கலக்காமல் இருக்க வகை செய்தல் வேண்டும். நடைபாதை வர்த்தகம் அல்லது நடமாடும் வர்த்தகரக்ள் அந்தக் கழிவுப் பொருட்களை அகற்றுவதாயின் அதற்காக விசேடமான சேவைகள் நடாத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கும் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்தும் நபர் மூலமாகவே அகற்றுதல் வேண்டும்.

(vii) இந்த துணைச் சட்டத்தின் (v) ஆம் உப பிரிவின்கீழ் ஏற்றுக்கொள்ளாத மேலே (அ), (ஆ) பந்திகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை கொபெய்கனே பிரதேச சபையினால் அப்படியான கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கு விசேடமாக வைக்கப்பட்டுள்ள கொள்கலனில் அல்லது இடத்துக்கு கொண்ட சென்று போடுதல் சட்டபூர்வமானது. அனைத்து நடமாடும், நடைபாதை வர்த்தகர்களும் கழிவுப்பொருள் பாத்திரங்களை நகர கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவருக்கு ஒப்படைக்க முன்னர் கொப்பெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கின்ற பிரகாரம் கட்டணம் ஒன்றைச் செலுத்துதல் வேண்டும்.

### தொழிற்சாலைகள்

16. (i) அனைத்து தொழிற்சாலை உரிமையாளர்களும் அல்லது உற்பத்தி சாலை வளவுக்குள் ஒன்று சேரும் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாறு தெரிவுசெய்து வேறாக்கப்படல் வேண்டும் :-

(அ) தாவர கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;
(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்.
(ஈ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்று சேரும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) இந்த துணைச் சட்டத்தின் 16 (i) ஆம் என்ற உப பிரிவின் (அ), (ஆ) மற்றும் (ஈ) பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணத்தை கொபெய்கனே பிரதேச சபைக்குச் செலுத்துவதன் மூலம் கொபெய்கனே பிரதேச சபையின் கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

(iii) வடமேல் மாகாணத்தில் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சூழல் கட்டளைகளின்கீழ் அந்த வர்த்தகத்துக்காக விநியோகிக்கப்படுகின்ற சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்களை அகற்றல் வேண்டும்.

(iv) மேலே 16 (i) (இ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பெருட்களுடன் எந்த விதத்திலும் கலந்து விடாமல் வகை செய்வதுடன், தொழிற்சாலையின் உரிமையாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட நபர் அந்தக் கழிவுப் பொருட்களை அதற்காக விஷேடமாக சேவை செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ள கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் நபர் ஒருவர் மூலமாகவே அகற்றப்படல் வேண்டும்.

### தோண்டுதல், நிர்மாணித்தல் மற்றும் இடித்துப் போடுதல்

17. (i) ஏதும் ஒரு வீதியை, பாதையை அல்லது பொது ஸ்தானத்தை தோண்டும்போது அல்லது ஏதும் கட்டிடங்கள், நிர்மாணிக்கும் போது அல்லது உடைத்து போடும் அனைத்து நபர்களும் அதனால் உருவாகின்ற கழிவுப் பொருட்களை பொருத்தமான முறையில் அந்த வளவிற்குள்ளிருந்து அகற்றப்படும் வரையில் வளவின் உள்ளே அல்லது செயலாளரின் மூலம் அங்கீகரிக்கப்படு கின்ற ஒரு இடத்தில் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(ii) இந்த துணைச் சட்டத்தின் 17(i) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக் கின்ற பிரகாரம் கட்டணம் ஒன்றை செயலாளரிடம் செலுத்துவதன் மூலம் கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

### வைத்தியசாலைகள்

18. (i) வைத்தியசாலையின் பொறுப்பாளி வளவுக்குள் ஒன்று சேரும் கழிவுப்பொருட்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தெரிவுசெய்து வேறுபடுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;
(இ) நோயாளர்களின் கழிவுப் பொருட்கள்;
(ஈ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(உ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்று சேரும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) 18 (i) ஆம் உப பிரிவின்கீழ் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை வேறான கொள்கலனில் போட்டு வைத்து அவைகளை அகற்றும் வரையில் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். அந்த கழிவுப் பொருட்களை கொபெய்கனே பிரதேச சபை மூலம் அதற்காக விசேடமாக செய்துள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுப் பொருள் ஒன்று சேர்த்தும்போது கொபெய்கனே பிரதேச சபைக்காக அப்படி கழிவுப் பொருள் சேர்த்து வருபவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். 18 (i) உப பிரிவின் (உ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப் படுகின்ற கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) 18 (i) (இ), (ஈ) பந்திகளின் கீழ் ஒன்று சேறும் கழிவுப்பொருட்களை எந்த வகையிலும் ஏனைய கழிவுப்பொருட்களுடன் கலக்கக்கூடாததுடன், அந்தக் கழிவுப் பொருட்களை 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சூழல் கட்டளைகளின் கீழ் அந்த வர்த்தகத்துக்காக வினியோகிக்கப்படுகின்ற சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்களை அகற்றல் வேண்டும்.

**தனியார் வைத்தியசாலைகளும் இரசாயன ஆய்வு கூடங்களும்**

18. (i) தனியார் வைத்தியசாலையின் அல்லது இரசாயன ஆய்வு கூடத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளி தனது நிறுவனத்தின் வளவுக்குள் ஒன்று சேரும் கழிவுப் பொருட்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தெரிவு செய்து வேறுபடுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;
(இ) நோயாளர்களின் கழிவுப் பொருட்கள்;
(ஈ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்;
(உ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்று சேரும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) 19 (i) ஆம் உப பிரிவின்கீழ் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை வேறான கொள்கலனில் போட்டு வைத்து அவைகளை அகற்றும் வரையில் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். அந்த கழிவுப் பொருட்களை கொபெய்கனே பிரதேச சபை மூலம் அதற்காக விசேடமாக செய்துள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுப் பொருள் ஒன்று சேர்த்தும் போது கொபெய்கனே பிரதேச சபைக்காக அப்படி கழிவுப் பொருள் சேர்த்து வருபவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) 18 (i) ஆம் உப பிரிவின் (உ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கின்ற கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) 18 (i) ஆம் உப பிரிவின் (இ), (ஈ) பந்திகளின் கீழ் ஒன்று சேரும் கழிவுப்பொருட்களை எந்த வகையிலும் ஏனைய கழிவுப் பொருட்களுடன் கலக்கக்கூடாததுடன், அந்தக் கழிவுப் பொருட்களை 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சூழல் கட்டளைகளின் கீழ் அந்த வர்த்தகத்துக்காக விநியோகிக்கப்படுகின்ற சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களை அகற்றல் வேண்டும்.

**வேறும் வளவுகள்**

19. (i) இலக்கம் 8 முதல் 19 வரை உள்ள பந்திகளில் விசேடமாக குறிப்பிடப்படாத வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்கின்ற ஏதும் ஒரு நபர் அல்லது பொது மக்களின் பங்களிப்புடன் பொது, சமய, அங்கத்தவர்களிடையே, கலாசார, அல்லது கல்வி செயற்பாடுகளை ஏற்பாடு செய்கின்ற ஏதும் ஒரு நபர் அந்த செயற்பாடுகளினால் அல்லது அது போன்ற நிறுவனத்தை நடாத்திச் செல்வதினால் ஒன்று சேர்கின்ற கழிவுப்பொருட்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தெரிவு செய்து வேறுபடுத்துதல் வேண்டும்.

(அ) உணவுப் பொருட்களின் கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு தாவர கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள்;
(இ) உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்;
(ஈ) வளவை கூட்டியதன் பின்னர் ஒன்று சேரும் தூசுகள் மற்றும் வேறும் உலர்ந்த கழிவுப் பொருட்கள்.

(ii) 20 (i) ஆம் உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்கின்ற நபர்கள் அந்த செயற்பாட்டினால் ஒன்று சேர்கின்ற கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றை செய்வதற்கு இயலுமானவாறு நேர காலத்துடன் அது பற்றி கொபெய்கனே பிரதேச சபைக்கு அறிவித்தல் வேண்டும் ;

(iii) தெரிவு செய்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றப்படும் வரையில் கொள் கலன்களில் போட்டு பொருத்தமான ஒரு இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும் ;

(iv) இந்தத் துணைச் சட்டத்தின் 20 (i) ஆம் உப பிரிவின் (அ), (ஆ) மற்றும் (ஈ) பந்திகளின் கீழ் ஒன்று சேரும் கழிவுப்

பொருட்கள் கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கின்ற பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி கொபெய்கனே பிரதேச சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டு உள்ள கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைப்பது சட்டபூர்வமானதாகும்.

(v) எனினும், ஏதும் ஒரு சமய ஸ்தானம் ஒன்றில் சமய விடயம் சம்பந்தமாக வர்த்தக நோக்கில் அல்லாது நடாத்திச் செல்லப்படுகின்ற எந்த ஒரு நடவடிக்கை சம்பந்தமாகவும், அந்த நடவடிக்கை காரணமாக ஒன்று சேருகின்ற மேலே 1 ஆம் உப பிரிவின் (அ), (ஆ), மற்றும் (இ) ஆகிய பந்திகளில் கீழ் ஒன்று சேர்க்கின்ற கழிவுப்பொருட்களை அகற்றுவது சம்பந்தமாக மேலே (iv) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கின்ற பிரகாரம் கட்டணம் ஒன்று அறவிடப்படும் என்ற வாசகம் இதற்கு பொருந்தாது.

(vi) மேலே (i) (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவம் ஏற்படுத்தும் கழிவுப்பொருட்கள் மேலே (அ), (ஆ) மற்றும் (இ) ஆகிய பந்திகளில் கீழ் உள்ள கழிவுப் பொருட்களுடன் எந்த வகையிலும் கலப்படம் ஆவதற்கு இடம் அளிக்கக் கூடாததுடன், குறிப்பிட்ட வளவின் உரிமையாளர் அந்த கழிவுப் பொருட்களை அதற்காக விசேடமாக சேவையை நடாத்திச் செல்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவர் மூலமாக மாத்திரமே கழிவுப் பொருளை அகற்றுதல் வேண்டும்.

**பாதைகளும் பொது இடங்களும்**

20. (i) கொபெய்கனே பிரதேச சபையினால் தீர்மானிக்கின்ற பிரகாரம் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் திட்டம் இடுவதற்கு, நிர்வகிக்கவும் மற்றும் பரிபாலிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்:-

(அ) கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகள், பொது ஸ்தானங்கள், நடைபாதைகள், பொது ஓடைகள், பொது நீரோடைகள் மற்றும் பொதுச் சந்தைகள் ஆகியவற்றை சுத்தமாகவும் சுகாதாரத்துக்கு ஏற்ற வகையில் நடாத்திச் செல்லுதல்.

(ஆ) கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக் குள் உள்ள கழிவுப் பொருட்களை தற்காலிகமாக ஒன்று சேர்ப்பதற்கு மிகவும் பொருத்தமானது என்று அடையாளம் காணப்பட்ட இடங்களில் போதுமான அளவு குப்பை தாங்கிகளைப் பொறுத்தி அவைகளை பராமரித்தல்.

(இ) விழாக்களின் போது, விசேட சம்பவங்கள் நடக்கும் சந்தர்ப்பத்தில், அல்லது கொபெய்கனே பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற சம்பவ சந்தர்ப்பங்களில் கொபெய்கனே பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற சந்தர்ப்பங் களில் அல்லது குறிப்பிட்ட விழாக்கள் அல்லது விசேட சம்பவங்களை ஏற்பாடு செய்கின்ற ஏற்பாட்டாளர்களின் வேண்டுதலின் பேரில் அல்லது பொது இடங்களில் பாவனைக்காக நடமாடும் கழிவுப் பொருள் தாங்கிகளை வழங்குதல்.

(ஈ) கழிவுப் பொருட்களை தற்காலிகமான ஒன்று சேர்ப்பதற்கு மிகவும் பொருத்தம் என்று கருதப்படும் இடங்களில் பொருத்தப்பட்டு இருக்கும் பொது கழிவுப் பொருள் தாங்கிகள் மற்றும் கொள்கலன் களை சுகாதாரத்துக்காக ஏற்றவகையில் பராமரித்து நடாத்திச் செல்வதற்கும் மற்றும் அதற்கு அருகாமையில் குடியிருக்கும் பொது மக்களுக்கு அவை இடையூராக அமைய முன்னர் அந்த தாங்கிகளில், கொள்கலன்களில் போடப் பட்டிருக்கும் கழிவுப் பொருட்களை அகற்றுதல்.

(உ) மேலே குறிப்பிடப்பட்ட பந்திகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றி கிடைக்கப்பெற்ற ஏதும் முறைப்பாடுகள் பற்றி விசாரிப்பதற்காக மற்றும் உடனடியாக அது பற்றி நடவடிக்கை எடுத்தல்.

(ii) கொபெய்கனே பிரதேச சபையினால் விசேடமாக ஒவ்வொரு கழிவுப் பொருளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தாங்கிகளுக்குள் அதற்கு உரித்தில்லாத கழிவுப் பொருட்கள் போடுவதிலிருந்து அனைவரும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்:-

**பிரதேச சபையின் கடமைகள்**

21. (i) செயலாளரினால் தலைவருடன் கலந்தாலோசித்து சபையின் அங்கீகாரத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை திட்டமிடுதல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல், மற்றும் பரிபாலித்தல் செய்தல் வேண்டும்:-

(அ) கழிவுப்பொருட்களை குறைப்பதற்கு, மீள் பாவனைக்கு, மீள் சுழற்சி செய்வதற்கு பொதுமக்களை உற்சாகப் படுத்தல்;

(ஆ) கழிவுப்பொருட்களை தெரிவு செய்து வேறாக்கள், ஒன்று சேர்த்தல், களஞ்சியப்படுத்தல், வெளியேற்றுதல் மற்றும் அகற்றுதல் சம்பந்தமாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலை திட்டங்களை படவரைபுகளை செயற்படுத்தல், அல்லது ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல்;

(இ) மீள் பாவனைக்கு, மீள்சுழற்சி செய்வதற்கான கடமையில் உள்ள நபர்களை மற்றும் சிறிய தொழில் முயற்சி யாளர்களை ஊக்குவித்தல்.

(ஈ) கழிவுப்பொருட்களை குறைத்தல், மீள் பாவனைக்கு, மீள் சுழற்சி செய்வதற்கான கடமையில் உள்ள நபர்களை முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.

(உ) கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல் முறை பற்றிய மாதிரிகளை மேற்பார்வை செய்தல்;

(ஊ) கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு பிரதேசத்தலும் உள்ள கழிவுப் பொருள் வகைகளுக்காக கொபெய்கனே பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற பிரகாரம் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்க்கும் திகதிகள், நேரங்கள், முறைகள், மற்றும் கட்டணங்களை குறிப்பிட்டு கழிவுப்பொருட்களை ஒன்று சேர்க்கும் நேர அட்டவணை ஒன்றை தயாரித்தல், மற்றும் பிரசித்த விடுமுறை தினங்களில் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கான உரிய நிபந்தனைகளை அந்த நேர அட்டவணையில் குறிப்பிடப்படல் வேண்டும்

(எ) அங்கீகாரம் வழங்கப்பட்ட கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவர்களுக்கு வேறாக ஒப்படைக்கப்படாத ஏதும் வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் நேர அட்டவணைப்படி உரிய நேரத்தில் ஒன்று சேர்த்தல்.

(ஏ) அங்கீகாரம் வழங்கப்பட்ட கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவர்களுக்கு வேறாக ஒப்படைக்கப்படாத அபாயகரமான கழிவுப் பொருட்கள் மற்றும் வேறும் ஏதும் கழிவுப் பொருட்களை சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படாத வகையில் அகற்றுதல்.

(ஐ) அபாயகரமான கழிவுப்பொருட்கள் அல்லது செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட வேறும் ஏதும் கழிவுப்பொருள் வகைகளை தவிர்ந்த பாதைகளைக் கூட்டுவதன் மூலம், ஓடைகளை துப்பரவு செய்வதன் மூலம் மற்றும் பொது இடங்களை சுத்தம் செய்யும் போது ஒன்று சேரும் கழிவுப் பொருட்களை மற்றும் பொது வண்டில்கள் மூலம் ஒன்று சேர்க்கும் கழிவுப் பொருட்கள் மற்றும் கொபெய்கனே பிரதேச சபை ஊழியர்களினால் ஒன்று சேர்க்கும் கழிவுப் பொருட்களை அங்கீகாரம் பெற்ற கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைக்கவோ அல்லது கொபெய்கனே பிரதேச சபையின் மூலம் உரிய முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) உணவு வகைகள் மற்றும் வேறும் தாவரவியல் உக்கக்கூடிய பின் பாவனைப்படுத்தக் கூடிய கழிவுப் பொருட்கள் செயல் முறை ரீதியில் செய்யும் வரை முற்று முழுதாக அல்லது பகுதி பகுதியாக தயாரிப்பதற்கு அல்லது சீர் திருத்துவதற்கு வேலைத்திட்டம் அடங்கியதாக கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவர்கள் மூலம் ஒன்று சேர்க்கப்படும் வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் சம்பந்தமாக செயற்படுவதற்கும் மற்றும் அந்த செயற் திட்டத்தினால் நிராகரிக்கப்படுகின்ற மற்றும் இந்தக் கழிவுப் பொருள் வகைகளின் வேறும் திரவியங்களை செயலாளரினால் அங்கீகரிக்கப்படுகின்ற முறையில் அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

(ஓ) வடமேல் மாகாண சூழல் அதிகார சபையுடன் அபாயகரமான கழிவுப்பொருட்களை அகற்றுவது சம்பந்தமாக அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்தல்.

(ஔ) 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் கட்டளைகளின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப் பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளலும், அந்த அனுமதிப்பத்திரத்தில் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு கழிவுப் பொருட்களை எரித்தல் அல்லது சுகாதாரத்துக்கு ஏற்ற வகையில் கிடங்கு ஒன்றை செயற்படுத்துதல் அல்லது உரிய மாற்று முறை ஒன்றினை நடாத்திச் செல்லுதல்.

(க) கழிவுப் பொருட்களை கூட்டி எடுத்தல், ஒன்று சேர்த்தல், தெரிவு செய்து வேறாக்குதல், கொண்டு செல்லல், மாற்றுதல், மற்றும் அகற்றுதல் என்ற விடயங்களுக்காக ஈடுபடும் அனைத்து ஊழியர்களுக்கும் துப்புரவு செய்வதற்கான திரவங்கள், பொருத்தமான உடைகள் கை உறைகள், முக மூடிகள், சப்பாத்துக்கள், வழங்குதல் மற்றுமும் அந்த ஊழியர்களுக்கு பொருத்தமான காப்புறுதி வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துதல் மற்றும் வருடத்துக்கு இரண்டு முறைக்கு மேற்படாத வைத்திய சிகிச்சை வழங்குதல்.

(ச) கொபெய்கனே பிரதேச சபை வளவுக்காக உள்ளக கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டம் ஒன்றைச் செயற்படுத்தல்.

(த) 2000 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றி தேசிய தந்திர முறை மற்றும் குறிப்பிட்ட சட்டத்திற்கும் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் கட்டளைகளின் ஏற்பாடுகளின் கீழ் ஆகக் குறைந்தது ஒரு வருட காலத்துக்கள் முடிப்பதற்கும், மற்றும் கடைசி அகற்றல் சம்பந்தமாக எதிர் காலத்தில் மூன்று (3) வருடங்களுக்கு திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துவதறகும், அந்தத் திட்டத்தை, அதைச் செய்து முடிக்கும் கால எல்லையின் பிரகாரம் நிரந்தர அடிப்படையின் பிரகாரம் பிரதேச சபையினால் அங்கீகாரம் செய்யப்படும்.

(ந) (அ) முதல் (த) வரை குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக கிடைக்கும் ஏதும் முறைப்பாடு அது எதற்காக ஏற்படக் கூடிய தொல்லைக்காயின், மூன்று நாட்களுக் குள்ளும் வேறும் முறைப்பாடு எனின் பதின் நான்கு நாட்களுக்குள்ளும் விசாரணை செய்தல் மற்றும் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

**அனுமதிப் பத்திரம்**

22. (i) கழிவுப் பொருட்கள் மீள் பாவனைக்கு எடுக்கக் கூடிய மற்றும் மீள் பாவனைக்குப் பயன்படுத்தக்கூடிய அல்லது பொஸ்பேட் பசளை, இயற்கை வாயு அல்லது வேறும் உற்பத்திகளை உருவாக்கக்கூடிய எவரும் ஒரு நபர் அல்லது நபர்கள் கீழ்காணும் விடயங்களை தகைமைகள் பூர்த்தி செய்வாராயின் அவருக்கு கொபெய்கனே பிரதேச சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்:-

(அ) கொபெய்கனே பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அல்லது வேறு உள்ளூராட்சி பிரதேசத்திற்குள் ஏதும் தொழில் முயற்சி ஒன்றை நடாத்திச் செல்பவர்;

(ஆ) 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் கட்டளைகளின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படுகின்ற சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் ;

(இ) ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்களுக்கு கொபெய்கனே பிரதேச சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு ஏற்றவாறு நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் நிலையம் ஒன்று இருத்தல்;

(ஈ) ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்களை செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம் மக்களுக்கு தொல்லைகள் ஏற்படாதவாறு சுகாதார முறைப்படி கொண்டு செல்வதற்கான வாகனங்கள் இருத்தல்;

(உ) குறிப்பிட்ட தொழில் முயற்சியை கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செய்து கொண்டு போகும் போது கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற பிரகாரம் குறிப்பிட்ட கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்காக கட்டணம் ஒன்றை கொபெய்கனே பிரதேச சபைக்குச் செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருட்களை தயாரிக்கும்போது அல்லது சரி செய்யும்போது மிகுதமாகும் அல்லது நிராகரிக்கப்படும் அல்லது பக்க உற்பத்தியாக தயாராகும் கழிவுப்பொருட்களை கொபெய்கனே பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் கொபெய்கனே பிரதேச சபைக்கு ஒப்படைப்பதற்கு உடன்படுதல்.

(ii) கொபெய்கனே பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கும் சமயத்தில் அல்லது தள்ளுபடி செய்த சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி அப்படி நிராகரித்த அல்லது தள்ளுபடி செய்த காரணத்தை கேட்குமிடத்து அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பம் கிடைத்து 30 நாட்களுக்குள் அது பற்றி விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

(iii) செயலாளரினால், செல்லுபடியாகும் கால எல்லைக்குள் ஒன்று சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட கழிவுப் பொருள் வகை அல்லது வகைகள் குறிப்பிட்ட கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட பிரதேசம் மற்றும் வேறும் பொருத்தமான நிபந்தனைகள் அத்தாட்சிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) இந்த துணைவிதியின் 23 (i) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு செயற்படாத சந்தர்ப்பத்தில் இந்தத் துணைச் சட்டத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை செல்லுபடியாகாமல் செய்ய வேண்டும்.

(v) 23 (iv) ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று செல்லுபடியாகாமற் செய்த சந்தர்ப்பத்தில் எந்த ஒரு நபர் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்தல் அல்லது பெற்றுக் கொள்ளல் கூடாது. அது போன்ற சந்தர்ப்பங்களில் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மக்களை அறிவுறுத்தும் வகையில் செயலாளர் ஊடகத்தின் மூலம் அல்லது வேறு முறையில் போதுமான விளம்பரத்தைச் செய்தல் வேண்டும்.

### கழிவுப்பொருட்களை போடும் இடங்கள்

23. கொபெய்கனே பிரதேச சபையினால் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுமதி இல்லாத நபர்கள் அங்கு உள்ளே செல்வதற்கும் அங்கே நடமாடுவதும் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அந்த பிரதேசத்தினுள் ஏதும் பொருட்கள், திரவியங்கள் அல்லது வீசப்பட்ட ஒரு பொருளை 'வைப்புச் செய்தல்' குழப்புதல், அல்லது அகற்றுதல் கூடாது. எந்த ஒரு நபரும் விசேடமாக நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கெபெய்கனே பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டால் மாத்திரம் கொபெய்கனே பிரதேச சபையினால் காலத்துக்கு காலம் நியமிக்கப்பட முடியுமான தடை செய்யப்பட்ட கழிவுப் பொருட்களை அங்கு வைக்க கூடாது.

24. அங்கீகரித்தல் ஏதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயலாளரின் மற்றும் வடமேல் மாகாண சூழல் அதிகார சபையின் ஏற்கனவே பெற்றுக் கொண்ட அங்கீகாரத்துடன் மாத்திரமே அன்றி எந்த ஒரு நபருக்கும் கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு காணியை அல்லது வசதியினை அதற்கு வெளி இடத்திலிருந்து ஒன்று சேர்கின்ற கழிவுப் பொருட்களை போடுவதற்கு அல்லது பாவனைக்கு உட்படுத்தல் கூடாது.

25. கழிவுப் பொருட்களை கொண்டு போய் சேர்க்கும் எந்த ஒரு இடமாயிருப்பினும் அந்த இடத்திற்கு அல்லது காணியை சுற்றி மதில் அல்லது அதற்குப் பொருத்தமான மறைப்பு மூலம் அதை மறைக்க வேண்டியதுடன் அந்த இடத்துக்கு அல்லது காணிக்கு கொண்டு வந்து ஒன்று சேர்க்கும் குப்பை கூலங்கள், காற்று, தண்ணீர் போன்ற காரணங்களினால் பக்கத்து காணிகளுக்கு அல்லது பிரதேசத்துக்கு போகாதவாறு அதனைப் பராமரித்தல் வேண்டும்.

### வேறும்

26. (i) தலைவரினால் அல்லது அவருடைய எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட ஏதும் ஒரு நபருக்கு அனைத்துப் பொதுவான நேரங்களில் ஏதும் ஒரு வளவுக்குள் போவதற்கும், மற்றும் அதன் உரிமையாளர் அல்லது அங்கு வசிப்பவர் இந்தத் துணைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு செயற்படுகின்றாரா என்று பரிசீலிப்பதற்கு அதிகாரம் உண்டு.

(ii) அந்த வளவின் உரிமையாளர், வசிப்பவர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அங்கு வசிக்கின்ற அல்லது வேலை செய்கின்ற எந்த ஒரு நபரும் தலைவருக்கு அல்லது அவரின் ஏதும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு தேவைப்படுகின்ற தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைச் சட்டத்தின் கீழ் தலைவரினால் அல்லது அவரின் ஏதும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு தனது அதிகாரங்களை பிரயோகிப்பதற்கு எந்த ஒரு நபரும் இடையூறு ஏற்படுத்தல் கூடாது.

### தண்டனை

27. இந்த துணைவிதியின் கீழ் எந்த ஒரு சரத்தையும் மீறுவதானது குற்றவாளியாக கருதப்படுவதுடன் அந்தக் குற்றம் சம்பந்தமாக நியாயாதிக்கம் உடைய நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்படுமிடத்து, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் இலக்க பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளுக்கு தண்டனை பெறல் வேண்டும்.

**பொருள்கோடல் :-**

*28.* இந்த துணைவிதியின் விடயங்களுக்காக வசனங்கள் சம்பந்தமாக பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி ;

"கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருள்" என்றால், அவைகளை வெளியே எடுத்தெறிந்தவருக்கு பாவனைக்கு பெறுமதி இல்லாத பொருள் என்ற கருத்தை தருவதுடன், ஊத்தைகள், குப்பைகள், வீதியை துப்பரவு செய்யும் போது ஒன்று சேறும் கழிவுப் பொருள், தூசி, மண், சேறு, மற்றும் சாம்பல் என்று கருதப்படும்.

"உணவு கழிவுப்பொருள்" எனும் போது மனித பாவனைக்காக பாவிக்க முடியாத உணவுப் பொருள் என்று கருதப்படும்.

"உபத்திரமான கழிவுப் பொருள்" எனும் போது மனித சுகாதாரத்திற்கு அல்லது சூழலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய நஞ்சுடனான, எரியக்கூடிய, எதிர் வளைவை ஏற்படுத்தக்கூடிய, நோய் தன்மையுடைய, ஒளிக்கதிர் வீசக்கூடிய கழிவுப் பொருள் என்று கருதப்படும்.

"ஒன்று சேர்த்தல்" எனும் போது அங்கீகாரம் பெற்ற ஒன்று சேர்ப்பவன் அல்லது கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரினால் மீள் பாவனைக்கு உட்படுத்தல், தயாரித்தல், திருத்துதல், அகற்றுவதற்கு வசதியாக எடுத்துச் செல்லுவதற்காக கழிவுப்பொருள் ஒன்று சேர்த்தல் என்று பொருள்படும்.

"கொம்போஸ்ட்" எனும் போது இயற்கை பசளை உற்பத்தியைக் குறிக்கும்.

"தலைவர்" என்பது, கொபெய்கனே பிரதேச சபைக்குத் தெரிவாகி உள்ள தலைவரைக் குறிக்கும்.

"செயலாளர்" எனும் போது கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லை சம்பந்தமாக பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் கொபெய்கனே பிரதேச சபை அதிகார எல்லைக்கு அமைக்கப்பட்டுள்ள கொபெய்கனே பிரதேச சபையின் செயலாளர் என்று கருதப்படுவதுடன், கொபெய்கனே பிரதேச சபையின் செயலாளர் இல்லாத நேரத்தில் அவருக்காக பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ள எவரும் ஒரு நபரை மற்றும் பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் செயலாளரின் அதிகாரங்களை கடமைகள், மற்றும் காரியங்களை செயற்படுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட கொபெய்கனே பிரதேச சபையின் ஏதும் ஒரு உத்தியோகத்தர் அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அளவும் அதில் அடங்கும்.

"களஞ்சியப்படுத்தல்" எனும் போது உரிமையாளருடைய அல்லது வசிப்பவருடைய வளவுக்குள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொது ஒன்று சேர்க்கும் இடத்தில் கழிவுப் பொருள் வைத்திருத்தல் அல்லது புதைத்தல் என்று பொருள்படும்.

"கட்டணம்" எனும் போது சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதும் ஒரு கட்டணம் என்று பொருள்படும்.

"வீட்டுத் தோட்ட கழிவுப் பொருள்" எனும் போது வீட்டுத் தோட்டத்தில் உள்ள மரங்களில் இருந்து அல்லது செடிகளில் இருந்து அகற்றப்படுகின்ற கிளைகளின் பகுதிகள் மற்றும் வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்படும் கற்கள், மண் என்று பொருள்படும்.

"இலகுவில் சீரணமடையக் கூடிய கழிவுப் பொருட்கள்" எனும் போது மிகச் சிறிய கிருமிகளினால் உக்கலடையக் கூடிய கழிவுப் பொருள் என்று பொருள்படும்.

"பொது ஸ்தானங்கள்" எனும் போது பாதை ஒன்று, மைதானம் ஒன்று, பொதுக் காணி ஒன்று, பாதைக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசம், விளையாட்டு மைதானம் ஒன்று, பொதுக்கட்டிடம் ஒன்று, மயானம் ஒன்று, பஸ் வண்டிகள் தரிப்பிடம் ஒன்று, புகையிரத நிலையம் ஒன்று, கங்கை ஒன்று, ஓடை ஒன்று, வாய்க்கால் ஒன்று, பொய்கை ஒன்று, நீர்த்தேக்கம் ஒன்று, சிறிய குளம் ஒன்று, தடாகம் ஒன்று, கலப்பு ஒன்று, கிளை கங்கை ஒன்று, நீரோடை ஒன்று, கடல், கடற்கரை ஒன்று அல்லது பொது மக்களால் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற வேறும் இடங்கள் என்று பொருள்படும்.

"மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப் பொருள்" எனும் போது, அந்தக் கழிவுப் பொருளை தொடர்ந்தும் கழிவுப் ெருளாக அடையாளம் காண முடியாதவாறு அதன் உருவத்தை மாற்றி திரும்பவும் பாவனைக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப் பொருள் என்று பொருள்படும்.

"மீள் பாவனைக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப்பொருள்" எனும் போது, கழுவுவதன் மூலம், கிருமிகளை அழிப்பதன் மூலம், அல்லது வேறு வகையில் துப்பரவு செய்வதன் மூலம் பாவனைக்கு உட்படுத்தக்கூடிய கழிவு பொருள் என்று பொருள்படும்.

"போக்குவரத்து" எனும் போது, மனிதனால், மிருகத்தினால் அல்லது இயந்திர சக்தியின் மூலம் செயற்படுகின்ற ஏதோ ஒரு வகையில் போக்குவரத்துச் சாதனமாக பாவனைக்கு உட்படுத்தி கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கப்படுகின்ற இடத்தில் இருந்து அவைகளை தயார்படுத்தும், தயார்படுத்தல் அல்லது அகற்றிச் செல்கின்ற இடத்துக்குக் கொண்டு செல்லல் எனும் பொருள்படும்.

"பக்கி/பாத்திரம், அல்லது கொள்கலன்கள்" எனும் போது, துணைச் சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்றவாறு கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தல், வெளியேற்றுதல், ஒன்று சேர்த்தல் அல்லது கொண்டு செல்வதற்கு பயன்படுத்தக்கூடிய ஏதும் ஒரு மூடியினால் மூடப்பட்ட பக்க அல்லது பாத்திரம் அல்லது சாக்கு அல்லது வேறும் ஒரு கொள்கலன் என்று பொருள்படும்.

"அதிகாரம் பெற்ற ஒன்று சேர்ப்பவர்" எனும் போது, கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பதற்கோ அல்லது பெற்றுக்கொள்வதற்கு செயலாளரிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட நபர் என்று பொருள்படும்.

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" எனும் போது, துணைச் சட்டத்தின் கீழ் உள்ள கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு அல்லது கடமைகளைச் செய்து கொண்டு போவதற்கு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் செயலாளரினால் அல்லது தலைவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு நபர் எனும் பொருள்படும்.

"அகற்றுதல்" எனும் போது, மீள் பாவனைக்கு உட்படுத்தப்படாததும், மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படாததும், தயாரிக்கப்படாததும், திருத்தப்படாததுமான அனைத்து கழிவுப் பொருட்களும்

நிரந்தரமாக தடுத்து வைப்பதற்கு எதிர்பார்க்கும் காணி ஒன்றின் மேற்புறத்தில் அல்லது காணிக்குள் வைக்கப்படும் என்று பொருள்படும்.

“இடமாற்றம் செய்யும் இடங்கள்” எனும் போது, சபையினால் ஏதும் ஒரு விடயத்துக்காக நிச்சயித்த இடம் என்று கருதப்படுவதுடன், அந்த இடத்திலிருந்து ஏதும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதற்காக தயாரிப்பதற்கு, திருத்துகின்ற, அல்லது அகற்றுவதற்கு இலகுவான விதத்தில் கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு துரிதமாக்கும் விடயத்தை முன்னேற்றும் விடயத்துக்காக கழிவுப் பொருட்களை மிகவும் சிறிய வாகனங்களை விட பெரிய அளவினதாக வாகனங்களுக்கு மாற்றுவது அங்கு இடம்பெறும்.

“நபர்” எனும் போது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப் படாத ஒரு கம்பனி அல்லது பல நபர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய சங்கம் அல்லது சபை அல்லது ஏதும் ஒரு நபரைக் குறிக்கும்.

“பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவர்” எனும் போது, பக்கிகளில் அல்லது கொள்கலன்களில் கழிவுப் பொருட்களை கூட்டி எடுத்துப் போடுதல், ஒன்று சேர்த்தல், பெற்றுக்கொள்ளல், அகற்றுதலுக்காக கொடபேகனே பிரதேச சபையினால் ஈடுபடுத்தப்படும் ஊழியர் அல்லது ஏதும் ஒரு விடயத்தை செய்வதற்கு சபையுடன் குத்தகைக்கு உட்பட்டுள்ள ஒரு நபர் என்று பொருள்படும்.

“வேறுபடுத்துதல்” எனும் போது, இந்தத் துணைச் சட்டத்தின் போடப்பட்டுள்ள பல்வகைப் பொருட்களுக்கு உட்பட்டவாறு கழிவுப் பொருட்களை பல்வேறு வகைக்கு பிரித்து வேறாக்கல் எனும் பொருள்படும்.

“தயாரித்தல்” எனும் போது, கழிவுப் பொருட்களை பிரயோசனத்துக்கான உற்பத்தியாக பரிமாற்றும் செயற்பாடு எனும் பொருள்படும்.

“சபை” எனும் போது, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பிரதேச சபை எனும் பொருள்படும்.

“பிரதேச சபை அதிகார எல்லை” எனும் போது, பிரதேச சபை சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட பிரதேசம் எனும் பொருள்படும்.

“சுகாதாரத்துக்கு ஏற்ற வகையில் நிலம் நிரப்புதல்” எனும் போது அதனுடன் சேர்ந்த சமூக மற்றும் சூழல் பிரச்சினைகளை குறைப்பதற்கு இலங்கையினுள் ஏற்றுக் கொண்டுள்ள தரத்துக்கு ஏற்றவாறு கழிவுப் பொருட்களை கடைசியாக புதைப்பதைக் குறிக்கும்.

“உரிமையாளர் அல்லது வசிப்பவர்” எனும் போது, வளவின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக அற்றோனி தத்துவம் பெற்ற ஏதும் ஒரு நபர் அல்லது உரிமையாளரினால் தனது தொழில் முயற்சியை அல்லது தொழிற்சாலையினை தோட்டத்தை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி அல்லது பொறுப்பாளர் அல்லது வாடகைக்குப் பெற்றுக்கொண்ட நபர் உட்படுவதுடன், வேறு ஒருவரின் கட்டளைக்கு கீழ் செயற்படும் முகாமையாளரும் இதில் உள்படுவார்.

“இந்த பிரிவின் தோண்டுதல், நிர்மாணித்தல் மற்றும் இடித்துப் போடுதல் என்ற செயலில் ஈடுபட்டு உள்ள அனைத்து நபர்களும்” என்பதற்கு சேவையில் ஈடுபடுத்துபவரினால் அந்த வேலைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள எவரும் நபர்கள் இருப்பின் அவர்களும் இதில் அடங்குவர்.

“நிர்மாண கழிவுப் பொருட்கள்” எனும் போது நிர்மாண வேலைகள் செய்யும் போது கட்டிட பொருட்கள் பாவனையின் போது ஒன்று சேருகின்ற மண், சகதி, தூசுகள், மற்றும் கழிவுப் பொருட்கள் மற்றும் கட்டிடங்களை உடைத்துப் போடும் போது ஒன்று சேரும் கழிவுப் பொருட்கள் அடங்கும்.

“வைத்தியசாலைகள்” எனும் போது, கருதப்படுவது ஏதும் ஒரு நோயினால் அல்லது சுகயீனத்தினால் அவதிப்படும் ஒரு நபர் அல்லது மிருகங்கள், அவைகளுக்கு பணிவிடை செய்யும், சிகிச்சை செய்யும் பொருட்டு பாவிக்கப்படுகின்ற அல்லது பாவிப்பதற்கு உத்தேசிக்கின்ற ஏதும் ஒரு வளவு (எப்படி விபரிக்கப்பட்ட போதிலும்) இடமாவதுடன், மருத்துவ விடுதி, மருத்துவ மனை சிகிச்சை நிலையம். தாய்மார்கள் மருத்துவ நிலையம் வைத்திய நிலையம் மற்றும் மிருக வைத்திய நிலையம், மிருக சிகிச்சை நிலையம் இதில் அடங்கும்.

“உபத்திரவம் ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்பு திரவியங்கள்” எனும் போது கருதப்படுவது சிகிச்சை கழிவுப் பொருட்கள், உடலுறுப்புக்கள், இறைச்சி, நோயை ஏற்படுத்தக்கூடிய மற்றும் மிகவும் தீவிரமாக நோயை ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்களும் கூர்மையான முற்களும்.

“அலுவலகம்” எனும் போது, 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, சாப்புக்கள் மற்றும் அலுவலகங்கள் வேலையாட்கள் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) தரப்பட்டுள்ள பொருள்கோடாகும்.

“சாப்பு” எனும் போது, கருதப்படுவது மொத்த அல்லது சில்லறை வர்த்தகத்துக்காக பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் இடமாக அமைவதுடன், உணவு குடிபான வகைகள் வைக்கப்பட்டிருக்கும் இடமும், மற்றும் தலைமயிர் வெட்டும் அல்லது உடல் அலங்காரம் செய்யும் ஒன்றை நடாத்திச் செல்லும் இடம் இதில் அடங்கும்.

இந்தத் துணைவிதியின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் பொருத்தப்பாடின்மை ஏற்படும் இடத்து அப்போது சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக் கொள்ளப்படும்.

4-496

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.